எஸ்ஆர்எம் ல் தேசிய அளவிலான ஹாக்த்தான் -சிறந்த கண்டுபிடிப்புகளுக்கு பரிசு - இந்திய மென்பொருள் பூங்கா இயக்குனர் சஞ்சய் தியாகி ரொக்க பரிசு வழங்கினார்

மத்திய மணித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் சார்பில் எஸ்ஆர்எம் அறிவியல் தொழில்நுட்ப நிறுவனத்தில் 5 நாட்கள் நடைபெற்ற மிடுக்கான இந்தியா ஹாக்த்தான்( SMART INDIA HAKATHON) என்ற வன்பொருள் தொழில்நுட்பம் பற்றிய தேசிய அளவிலான சிறந்த கண்டுபிடிப்பு போட்டியில் முதலிடம் பெற்ற சிறந்த குழுக்களுக்கு சென்னையில் உள்ள இந்திய மென்பொருள் தொழில்நுட்ப பூங்கா இயக்குனர் முனைவர் சஞ்சய் தியாகி பங்கேற்று தலா ரூ.1 லட்சம் பரிசு வழங்கினார்.இதில் ஹாக்த்தான் தீர்வு அலுவலர் சுபாங்கி பகவத் சிறப்பு பார்வையாளராக பங்கேற்றார்.

நாட்டின் பிரதமர் நரேந்திர மோடி புதிய கண்டுபுடிப்புக்கான ஸ்டார்ட் அப் திட்டத்தை கொண்டு வந்துள்ளார். அதன் படி தொழில் நிறுனங்களின் பிரச்சினைகள் மற்றும் தேவைகளை தீர்க்க நாட்டில் உள்ள உயர்கல்வி நிறுவனங்களில் ஹாக்த்தான் என்கிற கண்டுபிடிப்புக்களுக்கான போட்டிகளை மத்திய அரசின் மணித வள அமைச்சகம் நடத்தியது. அதன் இறுதி போட்டி எஸ்ஆர்எம் அறிவியல் தொழில்நுட்ப நிறுவனத்தில் கடந்த 8ந்தேதி முதல் 12ந்தேதி வரை 5 நாட்கள் நடத்தப்பட்டது.போட்டியை இந்தியாவிற்கான நமிபியா ஹை கமிஷனர் கேபிரியல் பி.சினிம்போ தொடங்கி வைத்தார்.

இதில் அப்பல்லோ மருத்துவமனை அரபிந்தோ பார்மா டாடா ஸ்டீல்ஸ் இந்துஸ்தான் யூனிலீவர்ஸ் ஆகிய 4 தொழில் நிறுவனங்களின் தீர்வுக்கான கண்டுபிடிப்பு போட்டியில் நாடு முழுவதும் இருந்து பொறியியல் மாணவர்கள் மற்றும் ஊக்குனர்கள் எனதலா 6 பேர் 10 குழுக்கள் பங்கேற்றன. இந்திய தொழில்நுட்ப கல்வி குழு மேற்பார்வையில் நடைபெற்ற இப்போட்டியில் ஈரோடு பன்னாரி அம்மன் தொழில்நுட்ப நிறுவனம், டெல்லி பாரதி வித்யாபீட பொறியியல் கல்லூரி, கோவை குமரகுரு தொழில்நுட்ப கல்லூரி,மதனபள்ளி அறிவியல் தொழில்நுட்ப நிறுவனம் ஆகிய 4 உயர்கல்வி நிறுவன குழுக்களின் கண்டுபிடிப்புக்கள் முதலிடத்தை பெற்றன.

அதை தொடர்ந்து ஹாக்த்தான் நிகழ்வில் வெற்றி பெற்ற குழுக்களுக்கு பரிசளிப்பு விழா நடைபெற்றது.நிகழ்ச்சிக்கு வருகை தந்தவர்களை எஸ்ஆர்எம் அறிவியல் தொழில்நுட்ப நிறுவனத்தின் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப இயக்குனர் முனைவர்சமுத்தமிழ்ச்செல்வன் வரவேற்றார்.

இதில் சென்னை இந்திய மென்பொருள் தொழில்நுட்ப பூங்கா இயக்குனர் சஞ்சய் தியாகி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு போட்டியில் முதலிடம் பெற்ற 4 குழுவிற்கும் தலா ரூ 1 லட்சம் மற்றும் விருது வழங்கி பாராட்டி பேசினார். நிகழ்ச்சியில் மிடுக்கான இந்தியா ஹாக்த்தான் தீர்வு அலுவலர் சுபாங்கி பகவத் பங்கேற்று பாராட்டி பேசினார். முடிவில் ஹாக்த்தான் ஒருங்கினைப்பாளர் முனைவர் சந்தனு பாடீல் நன்றி கூறினார்.